# தேரிமணல் நாவல் முன்வைக்கும் சாதி மதக் கலவரங்கள்

## Caste and Religious Riots depicted in the Novel Theari Manal

**லூ. ஜினிஷா**

முனைவர் பட்ட ஆய்வாளர் (முழுநேரம்), பதிவு எண் 2023PHDFTTM05,

தமிழ்த்துறை, திராவிடப் பல்கலைக்கழகம், சீனிவாச வனம்,குப்பம் - 517426

**முனைவர் பூ.சு.கணேஷ் மூர்த்தி**

தமிழ்த்துறை, திராவிடப் பல்கலைக்கழகம், திராவிடப் பல்கலைக்கழகம்,

சீனிவாசவனம், குப்பம் – 517426

**L. Jinisha**

*PhD Research Scholar, Reg No: 2023PHDFTTM05*

*Tamil Department Dravidian University Srinivasavanam, Kuppam -517426AP, India*

*Email id: jinishal2000@gmail.com ORCID: https://orcid.org/0009-000 –901 –1174*

**Dr P.S Ganesh Moorthy**

*Assistant professor,Tamil Department Dravidian University Srinivasavanam, Kuppam -517426*

*Andhra Pradesh, ORCID: https://orcid.org/0000-0003-3734-2402*

**Abstract**

The novel 'Theri Manal' was written based on the Mandaikadu riots that took place in Kanyakumari district in 1982. Mugilai Raja Pandian has depicted in his novel how the religious riots that arose due to the disease of religion, which went beyond the status of God and infected two communities that lived without any caste or religious differences, turned into caste riots. A Roman Catholic Christian falls in love with a Roman Catholic woman from a different caste and causes trouble. At the same time, the Mandaikadu riots that took place give the problem a new dimension and increase the opposition. It presents the message that religions, festivals, and religious traditions without humanity and brotherhood are all in vain. Mugilai Rajapandian has recorded in this novel how the riots that occurred around the Mandaikadu temple festival turned into caste-religious riots. This research article explains how the religious riots turned into caste-based riots.

**Keywords**: Mandaikadu, Caste, Religious, Struggles, Riots.

**ஆய்வுச்சுருக்கம்**:

*கன்னியாகுமரி மாவட்டத்தில் 1982 ஆம் ஆண்டு நடந்த மண்டைக்காட்டுக் கலவரத்தை முன்வைத்து எழுதப்பட்ட நாவல் 'தேரி மணல்' ஆகும். சாதி மத வேறுபாடின்றி வாழ்ந்த இரண்டு சமூகங்களைக் கடவுள் எனும் நிலையைத் தாண்டி மதம் என்னும் நோய் தாக்கியதால் எழுந்த மதக் கலவரம் சாதிக் கலவரமாய் மாறியதை முகிலை இராச பாண்டியன் தனது நாவலில் வடித்துள்ளார். ரோமன் கத்தோலிக்க கிறிஸ்தவன் ஒருவன் வேறு சாதியைச் சேர்ந்த ரோமன் கத்தோலிக்க பெண்ணை காதலிப்பதால் பிரச்சனை ஏற்படுகிறது. அதே நேரத்தில் நிலவிய மண்டைக்காட்டு கலவரத்தால் அந்த பிரச்சனை புதிய பரிமாணத்தைப் பெற்று எதிர்ப்பை மிகுதியாக்குகிறது. மனிதநேயமும் சகோதர உணர்வுமற்ற சமயங்கள், விழாக்கள், சமய மரபுகள் அனைத்துமே வீண்தான் என்ற செய்தியை இந்நாவல் முன்வைக்கிறது. மண்டைக்காட்டுக் கோயில் விழாவை ஒட்டி ஏற்பட்ட கலவரம் சாதி மத ஊர் கலவரங்களாக உருமாறும் விதத்தினை முகிலை இராசபாண்டியன் இந்நாவலில் பதிவு செய்துள்ளார். மதக்கலவரம் எவ்வாறு சாதிக் கலவரமாக மாறியது என்பதை பற்றி இவ்வாய்வுக்கட்டுரை விளக்குகிறது.*

**திறவுச்சொற்கள்:** *மண்டைக்காடு, சாதி, மதம், போராட்டங்கள், கலவரங்கள்.*

**ஆய்வு நோக்கம்**

தேரி மணல் என்னும் நாவலில் பதிவு செய்யப்பட்டுள்ள மண்டைக்காட்டுக் கலவரம் மதக் கலவரமாகத் துவங்கி எவ்வாறு சாதிக் கலவரமாக உருமாறியது என்பதைக் குறித்து பதிவு ஆராய்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

**முன்னுரை**

தமிழிலக்கியத்தில் சென்ற நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து இன்று வரை சமூக நாவல் என்ற இலக்கிய வகை தோன்றி வளர்ச்சியடைந்து வருகிறது. அவ்வகையில் சமூக வாழ்வை பின்னணியாக காட்டும் நிலைக்கு மேலாக, சமூக வாழ்வையே மையமிட்டுச் சமூக ஆவணமாக ஆக்கிவிடும் நிலை யதார்த்த நாவல்களில் இருப்பதைக் காணலாம். அத்தகைய யதார்த்தப்போக்கில் அமைந்த நாவல் முகிலை இராசபாண்டியனின் 'தேரிமணல்' ஆகும். மண்டைக்காட்டு கோயில் விழாவில் ஏற்பட்ட மதத்கலவரம் சாதிக்கலவரமாக உருமாறிய போக்குகள் குறித்து ஆராயப்படுகின்றன.

**மதக்கலவரம்**

இந்து மதத்தை விட்டு வெளியேறும் ஒடுக்கப்பட்ட மக்களை வன்மத்தோடு தாக்குவதே இங்கு மதக்கலவரத்தின் வரலாற்று அடிப்படை. (இந்து மீட்புவாத நோக்கில்) இந்து மதத்திற்குள் சனாதனத்தை ஏற்காமல் வெளியேறிய ஒடுக்கப்பட்ட மக்களை தன்னிடம் அடிமையாக இருந்த பணியாள் ஓடிவிட்டானே என்கிற எஜமானத்திமிரே பொதுவாக மதக்கலவரமாகச் சித்தரிக்கப்படுகிறது. இந்த அடிப்படையில் 80 - களில் கிறிஸ்தவ மீனவர்களையும் இந்து நாடார்களையும் பிரிக்கிற வேலையைச் செய்தது ஆர்.எஸ்.எஸ் இந்துமுன்னணி. சான்றாக 1978 நவ.7 இல் கன்னியாகுமரியில் ஏற்பட்ட முதல் மதக்கலவரம் 1981 - 82 மண்டைக்காட்டுக் கலவரம்.

**மண்டைக்காட்டுக் கலவரம்**

மண்டைக்காட்டுக் கலவரமானது, 1982 - இல் கன்னியாகுமரி மாவட்டத்தில் இந்துக்களுக்கும் (நாடார்) கிறித்தவர்களுக்கும் (முக்குவர்/ பரதவர்) இடையே ஏற்பட்ட மத மோதலைக் குறிக்கின்றது. இந்தக் கலவரத்தைப் பற்றி விசாரிக்க நீதிபதி தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டதை அறியலாம்.
1982 ம் ஆண்டு மண்டைக்காடு பகவதி அம்மன் கோயில் மாசி கொடை விழா வழக்கம் போல் துவங்கியது. விழாவின் முதல் நாள் கிறித்தவர்கள் இந்து பெண்களை கேலி செய்கிறார்கள் என்ற வதந்தி பரவியது. ஏற்கனவே வழிபாட்டுக்கு ஒலிபெருக்கி கட்டுவது தொடர்பாக சர்ச்சை நிலவி வந்தது. இதன் காரணமாக மார்ச் 1, 1982 அன்று மக்கள் மண்டைக்காடு ஆலயத்தின் முன் கூடினர். இதில் ஏற்பட்ட கலவரத்தில் காவலர்கள் 46 முறை துப்பாக்கிச் சூடு நடத்தியதில் ஆறு பேர் இறந்தனர். அக்கலவரம் கல்லுக்கூட்டம், ஈத்தாமொழி, இராசாக்கமங்கலம், பிள்ளைத்தோப்பு, நாகர்கோவில் முதலிய இடங்களுக்கும் பரவியது. இரண்டு வாரங்கள் கழித்து நடந்த துப்பாக்கிச் சூட்டில் மேலும் இரண்டு பேர் கொல்லப்பட்டனர். கோவளத்தில் நடந்த கலவரத்தில் ஒருவர் கொல்லப்பட்டார். அந்தக் கலவரத்தில் தேவாலயங்கள், கோயில்கள், மருத்துவமனைகள், மற்றும் பொது சொத்துக்கள் அதிகமாக சேதம் அடைந்தன. கடற்கரையிலுள்ள மீனவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டனர். மீன்பிடி வலைகள் அழிக்கப்பட்டன. அவர்கள் பயன்படுத்திய குடிநீர் கிணறுகளில் டீசல் முதலான நஞ்சு கலக்கப்பட்டது. அவர்களுக்கான உணவுப் பொருட்கள் செல்லும் வழிகளும் அடைக்கப்பட்டன.

**தமிழகத்தில் சாதி மத சிக்கல்கள்**

தமிழகத்தில் வரலாற்றுரீதியாக சாதி அமைப்பின் ஒரு முக்கிய பரிமாணமாக விளங்குவது யாதெனில், சாதிரீதியாக மக்களை முக்கியமாக இரண்டு பெரிய குழுக்களாகப் பிரித்து வைக்கப்பட்டுள்ளதே ஆகும். பிற மதங்களான சமணம், பௌத்தம், இசுலாம் ஆகியவற்றை கடைபிடிப்பவர்களில் இதுபோன்ற பிரிவுகள் இல்லை. மனித சமூகங்களில் பல்வேறு வகையான பிரிவுகள் இருந்தாலும், ஒன்றோ அதற்கு மேலோ ஒன்றன் மேல் ஒன்றுடன் பொருந்தி, சிக்கலாகி சாதி உருவாகி, சாதி

மட்டுமே முறையான படிநிலையை அடைந்தது அறியலாம். தரம் மிகுந்த ஆதாரங்களுக்கு ஒப்புமை இல்லாமையும், மதிப்பில்லாமலும் ஆனது. சாதி ஒரு அடுக்கமைப்பின் மூடிய அமைப்பாக வளர்ச்சி பெற்றது. இதன் மூலம் ஒருவனின் சமூக மதிப்பானது அவன் பிறந்த சாதியுடன் நீண்டகாலம், அதனுடன் சேர்ந்தே ஒன்றி வாழ வேண்டியிருந்தது. ஒரு பிரிவு மக்கள் பிறிதொரு பிரிவு சமுதாயத்தின் தகு நிலையுடன் எவ்வாறு ஊடாடி நடந்துகொண்டார்கள் என்பதனை அறிய முடிகிறது.

உண்மையான சாதிப் படிநிலையை வகைப்படுத்தும் பணியானது அரசர்கள், அரசு அலுவலர்கள், வட்டாரத் தலைவர்கள் ஆகியோர்களால் மேற்கொள்ளப்பட்டது. அரசர்களால் கட்டப்பட்ட கோயில்களில் இந்து மதப் புனிதச் சடங்குகளைப் பின்பற்றும் பார்ப்பனர்கள் சமத்துவமின்மையை அறிமுகப்படுத்தினர். கோயில்களுக்குள் பல சமூகக் குழுக்கள் நுழைவதை அவர்கள் தடுத்தனர்.

**தேரிமணல் நாவல் காட்டும் மதக்கலவரம்**

பொழி வெட்டுவது தொடர்பாக இரு ஊர்க்காரர்களுக்கு ஏற்பட்ட பிரச்சனை நாவலின் துவக்கத்தில் பதிவு செய்யப்படுகிறது. மண்டைக்காடு கோயில் திருவிழாவிற்கு வந்திருந்த பக்தர்களில் சிலர் கடலில் குளித்தனர். அவ்வாறு குளிக்கும் வேளையில் சிலரை அலை அடித்து சென்றது. அதில் இருவர், மீனவர்களின் கட்டுமரத்தின் இடையே சென்றதால் மீனவர்கள் அவர்கள் மீது கோபம் கொண்டு அங்கேயே கைகலப்பு நடந்தது. கிறிஸ்தவர்கள் இந்துக்களை தாக்கினர் என்னும் நோக்கில் துவங்கிய மதக்கலவரத்தில் மீனவர்களும் பிற சமூகத்தினரும் மாறி மாறி தாக்கிக்கொண்டதோடு கொலை செய்யும் அளவிற்கும் துணிந்து விட்டனர். இரவீந்திரன் என்பவர் தொடங்கி பல கொலைகள் அங்கு அரங்கேறியது. இக்கலவரத்தில் மக்களின் வீடுகளுக்கு தீ வைக்கப்பட்டன. வாழைத்தோட்டங்கள் சூறையாடப்பட்டு வாழை மரங்கள் அனைத்தும் வெட்டி சாய்க்கப்பட்டன. ஏற்கனவே நிகழ்ந்து கொண்டிருந்த பொழி வெட்டுதல் தொடர்பான பிரச்சனையில் பாதிரியார் மீனவர்களுக்கு ஆதரவாக பேசியதால் அவர் மீது கோபம் கொண்ட பிற சமயத்தினர் அவரைக் கொல்வதற்கு திட்டமிட்டனர்.அதனை அறிந்த விதவைப் பெண் அவரைக் காப்பாற்றுகிறாள். ஆதலால் மத வெறியர்கள் அவளைக் கொன்று விடுகின்றனர்.

**சாதிக்கலவரமாக உருமாறிய மதக்கலவரம்**

இந்துக்களுக்கும் கிறித்தவர்களுக்குமிடையே நிகழ்ந்த கலவரம் பொருட்சேதங்கள், உயிர் சேதங்கள் போன்றவற்றால் சாதிக்கலவரமாக உருவெடுத்தது. மீனவர்கள் முதலில் நடத்திய தாக்குதலால் பிற சமூகத்தினர் காயமடைந்தனர். ஆதலால் அவர்களும் தாக்கத் துவங்கினர். இதனால் அன்றாடம் உழைத்து உண்ணும் மக்கள் பலர் தங்கள் உயிரையும் உடைமைகளையும் இழந்தனர். பெற்றோரை இழந்து குழந்தைகள் அனாதைகளாகின. பெண்கள் பலர் விதவைகளாகினர் 'இப்படியா வெறித்தனமா சனங்க இருக்கும்? சாதிக்காகவும் மதத்துகாகவும் இப்பிடி வெட்டீட்டு மாயுறாங்களே..."என்று சிலர் வாய் விட்டுப் பேசினார்கள்'. அன்றாடம் வயலில் வேலை செய்து கிடைக்கின்ற கூலியை வைத்து வாழ்ந்தவர்கள் ஊர்புறத்து மக்கள். வறுமையில் வாழ்ந்த அவர்கள் கொலை வெறி பிடித்தவர்கள் அல்லர். ஆனால் அவர்கள் அறிவை ஒதுக்கிவிட்டு உணர்ச்சியின் இழுப்புக்கு ஏற்ப நடந்து கொண்டார்கள். ஆகவே பல உயிர்களை மனிதாபிமானமின்றி கொன்றளித்தனர்.

**முடிவுரை**

மனிதகுலம் மனநிறைவோடும் அமைதியோடும் வாழ்வதற்கான வழிகளைத் தேடுவது அவசியமானதாகும்.அதற்கேற்றவாறு அனைவரும் ஒரு சேர சிந்தித்து, நல்லதோர் சீர்திருத்த முறையை வகுத்து நன்முறையில் வாழ வேண்டும் என்ற நோக்கத்தினை முதன்மையாகக் கொண்டு வாழ்ந்திடல் வேண்டும். அதுவே மனிதனை உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்ல வழி வகுக்கும். மனிதன் யார்? மதம் என்பதன் பொருள் என்ன? மனிதனுக்கும் மதத்திற்கும் என்ன தொடர்பு? என்ற உண்மைகளை ஆராய்ந்து அவற்றை சிந்தித்து சாதி மற்றும் மதத்தின் பெயரால் ஏற்படும் பிரிவினைகளைப் போக்கி ஒற்றுமை என்னும் உயர்ந்த பண்புடன் வாழ்வது நலம் பயக்கும்.

**பார்வை நூல்கள்:**

1. அ.கா பெருமாள், படக்காரன் சொன்ன கருட புராணம், பாவை பதிப்பகம், 2023.
2. ஆ.சிவசுப்பிரமணியன் சமயமும் சாதியும் பரிசல் பதிப்பகம் 2021
3. க.கைலாசபதி, தமிழ் நாவல் இலக்கியம், குமரன் பதிப்பகம், 1968.
4. எஸ்.ஜெயசீல ஸ்டீபன், தமிழகத்தில் சாதியைக் கண்டுபிடித்தல், பாவை பதிப்பகம், 2023.
5. தி. லஜபதி ராய், நாடார் வரலாறு கறுப்பா காவியமா, நிகர்மொழி பதிப்பகம், 2019.
6. நொ.பொ.கராஷிமா எசுப்பராயலு, தமிழகத்தில் சாதி உருவாக்கமும் சமூக மாற்றமும், பாவை பதிப்பகம், 2022.
7. முகிலை இராசபாண்டியன், தேரிமணல், புள்ளினங்காள் பதிப்பகம், 2023.
8. யாளவர்த்தி நவீன் பாபு, வர்ணத்திலிருந்து ஜாதிக்கு, அலைகள் பதிப்பகம், 2023.

***References:***

1. A.K. Perumal, padakkaran sonna karuda puranam, Pavai publications, 2023.
1. 2.A. Siva Subramanian, samayam sathiyum, parisal publications, 2021.
2. K. Kailasabati, Tamil novel elekyam, Kumaran publications, 1968.
3. 4.S. Jayasila Stephen, thamizhakathil chadhiyai kandupidithal, pavai publications, 2023.
4. 5.T.Lajapathi Rai, Nadar varalaru karuppa kaviyama, Nigarmozhi publications, 2019.
5. N.P.karashima,A.Subbarayalu, chathi uruvakamum samooga matramum, pavai
6. Publications,2022.
7. 7.Mugilai Rasapandian,Theari manal,pullinangaal publications, 2023.
8. 8.Yalavarthi Naveen Babu, varnathilirunthu chathiku, Alaigal publications, 2023.

License : Copyright (c) 2025 Author : This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.